C.C.No. 450/2009 16.03.2026

PW8 பாலாஜி த/பெ.ராஜசேகரன்

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரி ஆஜர் இல்லை, மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

கன்றுக்குட்டி, மாடு, கன்று வெவ்வேறு என்றால் சரிதான். பொதுவாக 1 அல்லது 2 மாட்டை ஒரு நபரால் அழைத்து செல்லமுடியும் ஆனால் 7 மாடுகளை ஒரு நபரால் தனியாக அழைத்து செல்ல இயலாது என்றால் சரியல்ல அழைத்து செல்ல இயலும். 7 மாட்டை ஒரு நபரால் அழைத்து செல்ல இயலாது நான் முடியும் என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் காணாமல் போனது என்ன பொருள் என்றால் ரிட்டன் சர்ச் ஜாதியை சேர்ந்த 2 சிவளை கிடாய் கன்று, அதே ஜாதியை சேர்ந்த கருப்பு கிடாரி கன்று 3, நாட்டு மயிலை காளை கன்று ஒன்று, இரு ஜாதி நாட்டு பசு மாடு கன்று ஆக 7 கன்றுகள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று அசா1 அக்பர் எங்கு இருந்தார் என்று எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் அவர் டீ கடையில் இருந்ததாக தெரிந்துகொண்டேன்.

2) அசாஆ 8 மற்றும் அசாஆ 9, அசா4 சுரேஷீன் வீடு இருப்பதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அதேபோல் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சுற்றி உள்ளவர்களை இந்த வழக்கில் சாட்சியாக நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் இந்த வழக்கின் சாட்சிபட்டியலில் உள்ள அப்துல் ரகீம், அக்பர், ரோஜா பீவி ஆகியோர்களை ஒரே குடும்பத்தை சேர்ந்வர்கள் என்றால் சரிதான். அதேபோல் அப்துல் ரகீம் அரசு கலை கல்லூரி அருகே டீ கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த டீ கடைக்கு அருகே சில கடைகள் உள்ளது என்றால் ஞாபகம்

இல்லை. அதேபோல் புகார் மனு 06.00 மணிக்கு பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் முதல் தகவல் அறிக்கையில் புகார் பெறப்பட்ட நேரம் 08.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கமாக புகார்தாரர் தனது கன்றுகுட்டிகளை எந்த பகுதியில் மேய்க்க அழைத்து செல்வார் என்ற விவரத்தை நான் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் வழக்கு கோப்பில் அது குறித்து விவரங்கள் இல்லை.

3) புகார்தாரர் மற்றும் சாட்சி அப்துல் கன்றுகுட்டிகளை தேடி பல இடங்களுக்கு தேடி சென்றதாகவும், யாரிடம் விசாரித்தார்கள் என்ற விவரத்தை நான் விசாரித்து தெரிந்து கொண்டேன் என்றால் ஆம், எனது குறிப்பு புத்தகத்தில் உள்ளது. அந்த குறிப்பு புத்தகத்தை இந்நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் திருட்டுபோன கன்றுகுட்டிகளை புகார்தாரர் நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக்கொண்டார்களா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், வழக்கு கோப்பில் மாடுகளின் புகைப்படம் இருந்ததனால் அவைகளை புகார்தாரர் நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொண்டுள்ளார். அத்தாட்சியில் கையொப்பம் செய்துள்ள சரவணனை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் சேர்க்கவில்லை. அதேபோல் சரவணனின் வீட்டின் அருகே உள்ள நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

4) புகார்தாரர் மாடு மேய்க்க சென்ற இடத்தில் அசந்து துாங்கியதனால் மாடு எங்கு சென்றது என்ற விவரம் அவருக்கு தெரியவில்லை. அந்த விவரம் வீட்டில் உள்ளவர்களுக்கு தெரிந்தால் திட்டுவார்கள் என்பதனால் வீட்டில் கன்று குட்டிகளை கட்டிவிட்டதாக பொய்யான தகவலை குடும்பத்தாரிடம் சொல்லி காவல் நிலையத்தில் பொய்யான புகார்

கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் பொய்யான புகாரை பெற்று இவ்வழக்கில் எதிரி மீது தவறுதலாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து, சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல், காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து எதிரி மீது தவறுமலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை, வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.